பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 05 சனிக்கிழமை (17.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 84

## பாகிஸ்தான் - இலங்கை பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும்

### ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்து

இஸ்லாமாபாத்,பெப்ரவரி 17

**இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தம் நேற்று இஸ்லாமாபாத்தில் இரு நாடுகளின் வெளியுறப்புத் துறை அமைச்சர்களால் கைச்சாத்திடப்பட்டது.**

எந்த வடிவத்திலான தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தையும் முறியடிப்பதற்கான எமது திடசங்கற்பத்தை நாம் மீண்டும் பகிர்ந்து கொண்டோம் - என்று பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் குர்ஷிட் மஹ்மூத் கஷூரி ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் தகவல் தெரிவித்தார்.

உலக சமாதானத்துக்கும் மனித இனத்தின் முன்னேற்றத்துக்குமான கோட்பாடுகளின் அடிப்படையில் நாம் இது விடயத்தில் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கின்றோம் - என்றும் பாகிஸ்தான் அமைச்சர் கூறினார்.

இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் நிலைப்படுத்துவதற்கான பாகிஸ்தானின் பங்களிப்புக்கு நான் மீண்டும் உத்தரவாதம் அளித்துள்ளேன் என்றும் அமைச்சர் குர்ஷிட் மஹ்மூத் தெரிவித்தார்.

வர்த்தகம், வாணிபம், உல்லாசப் பயணம், இரத்தினக்கல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் இரு தரப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்தி நெருங்கிச் செயலாற்றவும் புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தம் வகை செய்வதாக அவர் மேலும் தகவல் வெளியிட்டார்.

பாகிஸ்தானிற்கும் இலங்கைக்கும் இடையிலான விமானச் சேவை மற்றும் கடற்போக்குவரத்துத் துறைகளிலும் இரு தரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கின்றது.

இலங்கையின் சார்பில் வெளிவிவகார

(04ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கான போக்குவரத்துக்கு ஐ.நாவிடமிருந்து விமானங்கள்

### அரசாங்கம் கோரியுள்ளது

கொழும்பு, பெப். 17

யாழ். குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்கும், யாழ். குடாநாட்டுக்கான பயணிகள் போக்குவரத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையிடம் விமானங்களை ஸ்ரீலங்கா அரசு கோரியுள்ளது.

ஐ. நா. அதிகாரிகளுடன் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐ. நா. பிரதிநிதிகளிடம் இந்தக் கோரிக்கையினை முன்வைத்துள்ளார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் நிலவும் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடுகளை நீக்கும் பொருட்டு விமானங்கள் மூலம் பொருள்களைக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான உதவிகளை வழங்குமாறும் ஐ. நா. அதிகாரிகளிடம் அமைச்சர் கோரினார் என்று தெரிகிறது.

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கும், வெளியிடங்களிலிருந்து குடாநாட்டுக்கும் பொதுமக்கள் பயணம் செய்வதற்கு அதிக இருக்கைகள் கொண்ட விமானங்களை வழங்குமாறும் இதன் மூலம் யாழ். குடாநாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஓரளவு விரைவாகத் தீர்க்கலாம் என்றும் அமைச்சர் ஐ. நா. அதிகாரிகளிடம் ஆலோசனை முன்வைத்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க கீரிமலையில் பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.17

மகாசிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பதற்காக கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நேற்றுக் கூடினர்.

பக்தர்கள் தெல்லிப்பழை மற்றும் சேந்தாங்குளம் சோதனை நிலையங்கள் ஊடாக கீரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தெல்லிப்பழை சோதனை நிலையம் ஊடாக பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் பின்னர் சேந்தாங்குளம் ஊடாகவே கீரிமலைக்குச் சென்றனர்.

கீரிமலையில் பக்தர்கள் தங்க அனுமதி வழங்கப்பட்டதால், நேற்றுக்காலை முதலே பக்தர்கள் சேந்தாங்குளம் சோதனை நிலையம் ஊடாக கீரிமலைக்கு பெரும் எண்ணிக்கையில் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்று இரவில் ஊரடங்கு முற்றாக நீக்கப்பட்டதால், பக்தர்கள் கீரிமலை சென்று சிவராத்திரி அனுஷ்டிப்பதில் ஆர்வம் காட்டினர்.

சேந்தாங்குளத்தில் இருந்து விசேட பஸ் சேவை ஆலயம் வரை இடம்பெற்றது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் தனியார் வாகனங்கள் மூலமும் கீரிமலைக்குச் சென்றவண்ணம் இருந்தனர்.

சரித்திரப் பிரசித்திபெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்றிரவு விசேட பூசைகள், ஆராதனைகள் மற்றும் இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இன்று கீரிமலை தீர்த்தக்கரையில் தீர்த்தம் இடம்பெறவுள்ளது. (அ-1-68)

## போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியக்கோரும் பௌத்த பிக்குகள் இன்று முக்கிய முடிவை அறிவிப்பர்

கொழும்பு, பெப். 17

யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஐந்து வருடங்களை நிறைவுசெய்யும் முன்பாக அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும் எனக்கோரி கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிற்கு முன்பாகசுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தேசிய பிக்குகள் முன்னணியினர் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவது தொடர்பாக முக்கிய தீர்மானம் ஒன்றை இன்று எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு கண்டி தலதா மாளிகையில் இடம்பெறும் விசேட சமய வழிபாட்டை அடுத்து இந்தத் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் வண. தம்பர அமில தேரர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள பல சரத்துக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச நாடுகள் அங்கீகரிப்பனவாகவே அமைந்துள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் அவர்களின் தனி நிர்வாகம், அரசியல் அலுவலகங்கள் போன்றவை புலிகளுக்

(04ஆம் பக்கம் பார்க்க)

## பளை, சோரன்பற்று பகுதிகளில் நேற்று விமானக் குண்டுவீச்சு

கிளிநொச்சி,பெப்.17

பளை மற்றும் சோரன்பற்றுப் பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை 9.40 மணியளவில் 'கிபிர்' மற்றும் 'மிக்' விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகள் மீது இருபதுக்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன என்றும் -

சேதவிவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை என்றும் - விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இந்த விமானத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தப் பிரதேசங்களில் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களும் தீவிரமாக நடத்தப்பட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று இப்பகுதிகளில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலை உறுதிப்படுத்திய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க, படை நிலைகள் மீது தாக்குதல் நடத்த விடுதலைப்புலிகள் பயன்படுத்தும் நிலைகள் மீதே வான் வழிக் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்தார். (அ-1)

## குடாநாட்டுச் செய்தியாளர் ஒருவரைக் காணவில்லை

### விடுவிக்கக் கோருகிறது பத்திரிகையாளர் சங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.17

குடாநாட்டில் பணிபுரியும் செய்தியாளர் ஒருவரை வடமராட்சியில் வைத்து நேற்று முன்தினம் மாலை தொடக்கம் காணவில்லை.

யாழ். தினக்குரல், வலம்புரி பத்திரிகைகளின் பிரதேச செய்தியாளரான சுப்பிரமணியம் இராமச்சந்திரன் (வயது 36) என்பவரே காணாமற்போனவராவார்.

இவரை விடுவிக்கவேண்டும் என வட இலங்கைப் பத்திரிகையாளர்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

செய்தியாளர் காணாமற்போனமை குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

துன்னாலையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் இராமச்சந்திரன் (வயது 36) என்ற செய்தியாளரே காணாமற் போயுள்ளதாக அவரது

(04ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பத்திரிகைகளுக்கு அச்சுத்தாள் அனுப்பக்கோரி பிரதமருக்குக் கடிதம்

### ஸ்ரீகாந்தா எம்.பி. அனுப்பினார்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு அச்சுத்தாள் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் அதனை உடனடியாக அங்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ஸ்ரீகாந்தா, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பத்திரிகை அச்சுத்தாளுக்கு நிலவும் கடும் தட்டுப்பாடு காரணமாக, ஏற்கனவே தமது பக்கங்களை மிகக்கடுமையாகக் குறைத்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத் தினசரிகள் இன்னும் சில நாள்களில் பிரசுரிப்பதையே நிறுத்தவேண்டிய நிச்சயமான ஆபத்தை எதிர்நோக்கி நிற்கின்றன.

ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டதனால் கடந்த வருடம் ஓகஸ்ட் 12ஆம் திகதியிலிருந்து, கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் இன்றைய நாடாளுமன்றத்தின் அதிசிரேஷ்ட உறுப்பினரான நீங்களும் மிகச்சமீபத்தில் அதற்குள் பிரவேசித்திருக்கும் நானும், எவ்வித தயக்கமுமின்றி பேணக்கூடியதும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதுமான தகவல் பெறும் உரிமையைப் பாதுகாக்க யாழ்ப்பாணத் தினசரிகளுக்கு போதுமான அளவு அச்சிடும்தாள் உடனடியாகக்கிடைப்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அவசரமானதும் காத்திரமானதுமான நட

(04ஆம் பக்கம் பார்க்க)

## மூவரைக் காணவில்லை; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.17

குடாநாட்டில் காணாமற்போன மூவர் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் நேற்று முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

மார்ட்டீன் வீதியைச் சேர்ந்த இராசரத்தினம் புனிதபழனிவேல் (வயது 30) என்பவர் நேற்று காலை தனது தாயாருடன் கப்பலில் பயணம் செய்வதற்காக யாழ். ரயில் நிலையப் பகுதியில் தங்கி நின்ற சமயம் சீருடையில் வந்தவர்கள் அவரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர் என்று அவரது உறவினர்கள் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தாயார் பயணத்தைக் கைவிட்டுச் சென்றார்.

மானிப்பாய் மூத்ததம்பி லேனைச் சேர்ந்த

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Congratulations



We congratulate

**Rev Jason J.Selvaraja**

As he receives the honour as a Fellow of the Institute of Theological Education (FITE)
In recognizing his contribution for the growth of the Church and Theological Education in Sri Lanka.

By the
The Faculty of South Asia Institute of Theology (SAIT)

"On February 17, 2007"
In Sri Lanka.

Also we congratulate
Rev.Andrew Wills (UK) & K. Abraham (Australia)
Who too are receiving the same award

**Co-workers & the church congregation**
**Assembly of God, Chavakachcheri**

(57991)

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**பஞ்சலிங்கம் சரனியா**
திதி : அமாவாசை17.02.2007

இரு விழிகள் மூடியதால் பல விழிகள் நீர் சொரியுதம்மா
அம்மா நீயில்லை என்றெண்ணி பல உள்ளம் தவிக்குதம்மா
எம் மனத் திரையில் நினைவலைகள் நித்தம் ஓடுவதால்
நிலையிழந்த மானிடராய் தவிக்கின்றோம் உன்நினைவில்.

*மலர்வு 28.04.1995*
*உதிர்வு 08.03.1997*

*32, துரைராசா வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (57965)

அப்பா, அம்மா, அண்ணாமார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தம்பிராசா இராசரத்தினம்**

தோற்றம் 11-11-1933 மறைவு 19-01-2007



எமது குடும்ப விளக்கு அணைந்ததாகக் கேள்விப்பட்டு பலவழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் அன்னாரின் குடும்பத்தினராகிய நாம் நன்றியைக் கூறிக் கொள்கின்றோம்.

மேலும் இன்று(17.02.2007)சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் நாளை(18.02.2007)ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு யாவரையும் தயவன்புடன் அழைக்கின்றோம்.

*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.* (58201)

-குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் கந்தையா இராசலிங்கம்**

*தோற்றம் 20.12.1935 மறைவு 18.01.2007*

கடந்த 18.01.2007 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (17.02.2007) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுவினி,
இணுவில் மேற்கு. (58201)

- குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

திருமதி சிவஞானசுந்தரம் தங்கேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (4050 82152V), விசேட அ.அட்டை (0906000330) என்பன 07.02.2007 அன்று சுன்னாகத்துக்கும் ஏழாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் த.சிவஞானசுந்தரம் (ஓய்வு பெற்ற உப தபாலதிபர்), ஏழாலை கிழக்கு, ஏழாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(58245)

## வீடு வளவு உடன் வாடகைக்கு

ஆறுகால்மடம், ஆஸ்பத்திரியுடன் இணைந்த சகல வசதிகளுடன் கூடிய 5 அறை வீடு, 40 தென்னங்கன்று வருமான வளவுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு:
கண்ணன் லாச், பரமேஸ்வராச் சந்தி.
Tel.: 222 6466 (58247)

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:-19/02/2007- 09.00 AM

## மரண அறிவித்தல்

**திருமதி பரமநாதன் சரஸ்வதி**



அரியாலை, புறூடிலேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் சரஸ்வதி நேற்று வெள்ளிக்கிழமை (16.02.2007) அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், மோகனரூபனின் (பிரான்ஸ்) பாசமிகு தாயாரும் மரியதாஸ் - சற்குனேஸ்வரி (அரியாலை), யோகராசா (பிரான்ஸ்), யோதீஸ்வரன் - யோகேஸ்வரி (புஸ்பா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் செல்வராசா - ஜானகி(ஜேர்மனி), பத்மநாதன் - புவனேஸ்வரி, புஸ்பராணி(மணி) லிங்கேஸ்வரி, மரியதாஸ், யோதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் துஷாந்(தனு) நிமல்சாந், ரதிசாந்தி, நிக்சாலினி (பிரான்ஸ்), யோனார்த்தன் (பிரான்ஸ்), யோதிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியம்மாவும் தங் கலகாந்தன் (பிரான்ஸ்), கியூசிலீயா (பிரான்ஸ்), பிர்சிலீயா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (58249)
மோகனரூபன்(மகன் பிரான்ஸ்)
சற்குனேஸ்வரி(சகோதரி அரியாலை)
*32, புறூடிலேன், அரியாலை, யாழ்ப்பாணம்.*

## விற்பனைக்கு

2XXX தொடர் இலக்கத்தில் தொடங்கும் சிறிலங்கா ரெலிகொம் இணைப்பு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777 491062

## தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு
DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம் ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் செல்லத்துரை தனேந்திரகுமாரன்**
(கான இசைமணி ரங்கன்)



தோற்றம் 15-10-1948 மறைவு 10-03-2005
திதி : 17.02.2007

எங்கள் உணர்வுக்குள் உறைந்திருக்கும் அப்பாவே!
நீங்கள் எங்களைப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடையும் இந்நாளில் உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*16/2, கச்சேரி நல்லூர் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (58248)

மனைவி, பிள்ளைகள் மற்றும் சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**விமலரத்தினம் தியாகராஜா**



தோற்றம் 10 - 10 - 1942
மறைவு 27 - 02 - 2006
திதி : அமாவாசை

அன்பின் திருவுருவாய் வாழ்ந்து
வழி காட்டிய அம்மாவே!
எம்மை விட்டுச் சென்று ஓர் ஆண்டு சென்றதோ!

*'இராஜபவனம்'*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (57980)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**சிங்கராசன் கனகேஸ்வரி**
*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

தோற்றம் 26 - 08 - 1946
மறைவு 18 - 01 - 2007
திதி : அமாவாசை

உம் உடலைக் காணாது உருகியாம் அழுகின்றோம்
எம்மம்மா என்று சொல்லி ஏங்கித் தவிக்கின்றோம்
அம்மையாய் இருந்த எம் அன்புத் தாயே!
உந்தனது வழிகாட்டலை எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்.

*சுதுமலை மத்தி,*
*மானிப்பாய்.* (58244)

கணவர், பிள்ளைகள்.

## நினைவலைகள்

**முதலாம் ஆண்டு**



அன்னை மடியில் 13 - 08 - 1945
ஆண்டவன் அடியில் 28 - 02 - 2006

**திருமதி சிவகுருநாதன் இலட்சுமி**
*திதி:* 18.02.2007

**ஆறாம் ஆண்டு**



அன்னை மடியில் 21 - 03 - 1978
ஆண்டவன் அடியில் 17 - 02 - 2001

**சிவகுருநாதன் சிவரூபன்**
*திதி:* 14.03.2007

நீங்கள் இருவரும் ஒரு கூட்டில் நாங்கள் அனைவரும் நடுக் காட்டில்
இருப்பது போலெங்கள் நினைவலைகள்
உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும் உங்களின் இனிய உறவுகள்
*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*

கணவர், பிள்ளைகள்.
அப்பா, அக்கா, அண்ணா, தங்கை.

*இராஜ வீதி,*
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*

## அந்தியேட்டி அழைப்பு



19.01.2007 அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப விளக்கு
திருமதி
**காசிராசா நாகமுத்து**
(தங்கன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.02.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் ஆலய முன்றிலில் உள்ள மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மகன் - குமாரவேல்(அரியம்)
மகள்மார் - திருமதி இராசேந்திரம் புவனேஸ்வரி(திரவியம்)
- திருமதி வேலாயுதபிள்ளை லிங்கேஸ்வரி(சாந்தா)
- திருமதி தெய்வேந்திரம் குனேஸ்வரி(செல்வம்)

(சி/52050) *நாகலிங்கம் முதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## அமைதி வழித் தீர்வில் அரசுக்கு இன்னும் பற்றுறுதி உள்ளதா?

யுத்தத்தின் போக்கும் களநிலையும் எவ்வாறு இருந்தாலும் தற்போது உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இலங்கை விவகாரம் தொடர்பாக உருவாகிவரும் கருத்துகள் தெளிவான ஒரு செய்தியை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தற்சமயம் இலங்கைக்கான தனது மூன்று நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இங்கிருந்து புறப்பட்டிருக்கும் பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய விவகாரங்களுக்கான இணை அமைச்சர் கலாநிதி கிம் ஹவல்ஸ், தமது விஜயத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் தெரிவித்த கருத்துக்கள் இத்தகைய ஒரு செய்தியைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளுள் ஒன்றான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்தப் பிரச்சினை குறித்துப்பேசி, சமாதான உடன்பாடு கண்டு, அமைதி வழியில் தீர்வு காண்பதைவிட, இராணுவ ரீதியில் இனப்பிரச்சினையை அணுகி, தமிழர் தரப்பை அடக்கி, ஒடுக்கி, தான் விரும்பிய திட்டத்தைத் தமிழர்கள் மீது திணித்து, அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதிலேயே இலங்கை அரசுத் தலைமை விடாப்பிடியாக - பிடிவாதமாக - கண்ணும் கருத்துமாக - ஒற்றைக்காலில் நிற்கின்றது என்பதையே பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்துகள் பிரதிபலித்து நிற்கின்றன.

*'சமாதானத்துக்கான போர்' என்ற அணுகுமுறையைப் பின்பற்றினால் யுத்தம் தீவிரமடைவது தவிர்க்க முடியாதது. அந்த அணுகுமுறையால் அமைதி திரும்பாது. இதுவே அனுபவப் பாடம்.* - என்ற போதனையை வெளிப்படுத்திய வண்ணமே பிரிட்டிஷ் வெளிவிவகார இணை அமைச்சர் இலங்கைக்கான விஜயத்தை ஆரம்பிப்பதற்குத் தயாரானார்.

இலங்கை நிலைமை தொடர்பாகத் தாம் அறிந்து கொண்ட தகவல்களின் அடிப்படையில், தமது விஜயத்துக்கு முன்னர் இத்தகைய கருத்துக்களை வெளியிட்ட அவர், இங்கு நிலைமையை நேரில் கண்டறிந்து, மேலும் உண்மைகளை உள்வாங்கிக் கொண்டதன் நிமித்தம், தமது முன்னைய கருத்தை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் புதிய விடயங்களை முன்வைத்திருக்கின்றார்.

இலங்கையை விட்டுப்புறப்பட முன்னர் அவர் அளித்த பிரியாவிடைச் செய்தியில் இரண்டு முக்கிய அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

*"இலங்கையில் உள்ள அனைத்து மக்களினதும் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் இலங்கை அரசு விரைந்து நடவடிக்கை எடுப்பதை உலகம் பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளது.*

*"இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுவதற்கு சர்வதேச சமூகம் தயாராக உள்ளது. ஆனால், இலங்கை அரசு அமைதி வழித் தீர்வில் தனது உறுதிப்பாட்டை மீண்டும் சர்வதேச சமூகத்துக்கு உறுதிப்படுத்த வேண்டியுள்ளது."* - என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக்கருத்துகள் மூலம் இரண்டு விவகாரங்களைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார் பிரிட்டிஷ் அமைச்சர். இவை, அவரது கருத்துகள் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தின் கருத்துகளும் கூட என்பதே அரசியல் நோக்கர்களின் அவதானிப்பாகும்.

★ இலங்கையில் மக்களின் மனித உரிமைகள் மீறப்படும் விடயத்தில் அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்காமல் தவறிழைக்கிறது.

★ அரசு, அமைதி வழித் தீர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இராணுவத் தீர்வில் முனைப்புக் கொண்டு முழுத் தீவிரமாக நிற்கிறது.

- இவையே அந்த இரண்டு அம்சங்கள்.

இந்தக் கருத்து நிலைப்பாடே சர்வதேச சமூகத்தில் மேலோங்கி வருகின்றது என்றும் -

அத்தகைய கருத்து சர்வதேச மட்டத்தில் உருவாகக் கூடிய வகையில் தவறாகச் செயற்பட்டு - விடயங்களைத் தவறாகக் கையாண்டு - நாட்டுக்கு இந்த அரசு தீங்கிழைத்து வருகின்றது என்றும் -

இந்தமாத ஆரம்பம் வரை இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகப் பணிபுரிந்த மங்கள சமரவீர எம். பி. அப்பட்டமாக - வெளிப்படையாக - தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் பாதுகாப்பு விடயங்களைக் கையாள்வோர் பொறுப்பற்று - திமிரோடு - நடந்து கொள்வதால் வெளிநாட்டில் இலங்கை அரசுக்கும், அதன் தலைமைக்கும் ஏற்பட்டு வரும் அபகீர்த்தியையும் கெட்ட பெயரையும் நன்கு உணர - அறியக் கூடிய - பதவியில் இருந்தவர் மங்கள சமரவீர. அதனால் இவ்விடயத்தில் அவரது கருத்துகள், வெறும் அரசியல் உள்நோக்கம் கொண்ட அபாண்டமான குற்றச்சாட்டுகள் எனப் புறமொதுக்கக் கூடியவை அல்ல.

உரிமைக்கான தமிழர்களின் போராட்டத்தை இராணுவ வழியில் அடக்குவதன்மூலம் பௌத்த - சிங்கள மேலாண்மைத் திமிர் மிக்க தென்னிலங்கையின் வாக்கு வங்கியைக் கவர்ந்து, தம்மை 'துட்டகைமுனு' மன்னராக சரித்திரத்தில் பொறித்துக்கொள்வது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திட்டமாகும்.

இந்த இராணுவ வெறிப்போக்கிலான அவரது முயற்சிக்கு வெற்றி கிட்டுமா என்பது ஒருபுறமிருக்க, அது சர்வதேச ரீதியில் இலங்கையைத் தனிமைப்படுத்தி விடும்; மறுபுறத்தில் தமிழரின் ஆயுதப் போராட்டத்துக்கு நியாயம் சேர்க்கும் என்பது முக்கிய அம்சமாகும்.

பிரிட்டிஷ் வெளிவிவகார இணை அமைச்சர் தமது செய்திகளில் வசனங்களுக்கு இடையே - இராஜதந்திர மொழியில் - தெரிவித்துள்ள கருத்துக்களின் ஆழ, அகலங்களையும் உண்மைகளையும் உள்வாங்கித் தம்மைத் திருத்திக்கொள்ள இலங்கை அரசுத் தலைமை முன்வரவேண்டும். இவ்விவகாரத்தில் அது விரைந்து செயற்பட வேண்டும்.

அதைவிடுத்து, 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது போல அரசுத் தலைமை செயற்பட்டால் விளைவுகள் விபரீதமானவையாகவே முடியும். அவை தவிர்க்க முடியாதவையாகவும் இருக்கும்.

# வியாபாரத் தர்மங்களைக் கடைப்பிடியுங்கள்; பொருள்களை அதிக விலைகளுக்கு விற்காதீர்கள்!

## அரச அதிபர் வர்த்தகர்களுக்கு உருக்கமான வேண்டுகோள்

அத்தியாவசியப் பொருள்களை செயலகம் நிர்ணயித்த விலைகளில் விற்பனை செய்து வியாபாரத் தர்மங்களையும், தார்மீகங்களையும் கடைப்பிடிக்குமாறு வர்த்தகர்களிடம் அரசாங்க அதிபர் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செயலகம் நிர்ணயித்த விலைகளைவிடக் கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பதற்குச் சாட்டுக்கள் கூற வேண்டாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் -

யாழ். மாவட்டத்தில் விலைகள் நிர்ணயம் செய்யப்படும் பொழுது இப்பொருள்கள் கொழும்பில் கொள்வனவு செய்யப்படும் விலை, கப்பல் போக்குரத்து, ஏற்றியிறக்கல் கூலி, இலாப வீதம் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டுத், தீர்மானம் எடுக்கப்பட்டு அதன் விலைப் பட்டியல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் இப் பொருள்கள் பல்வேறு இடங்களில், நிலையங்களில், நடைபாதைகளில் 3,4 மடங்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே இப்பொருள்களை விற்பனை செய்யும் அனைவரும் நியாயமான விலையில் பொருள்களை விற்பனை செய்யவேண்டும் என மீண்டும் அறிவுறுத்திக் கேட்டு கொள்ளப்படுகின்றார்கள்.

அதிகவிலையில் பொருள்களை விற்பனை செய்யும் பலர் விலை கூட்டி விற்பனை செய்வதற்கான பல்வேறு சாட்டுக்களைக் கூறுகின்றார்கள். காரணங்கள் எவை கூறப்படினும் எதிர்காலத்தில் பொருள்களை விற்பனை செய்யும் அனைவரும் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனப் பணிக்கப்படுகின்றார்கள்.

★ தமது வர்த்தக நிலையத்தில் விற்கப்படும் முக்கிய பாவனைப் பொருள்களின் விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

★ விற்பனைப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான ஆவணங்கள் உரிய அதிகாரிகளினால் கோரப்படும் பொழுது அவை சமர்ப்பிக்கப்படவேண்டும்.

★ கொள்வனவுகளை வெவ்வேறு மறைமுக நடைமுறையில் மேற்கொள்வதனால் கூடுதலான விலையில் விற்பனை செய்யப் வேண்டியுள்ளது எனக் கூறப்படும் காரணம் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

### அனுமதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு மட்டுமே

★ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்வனவு செய்யப்படுவதற்குரிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு பிரதேச செயலாளர்களால் அனுமதிக்கப்பட்ட வர்த்தகர்கள் மாத்திரம் வியாபார நோக்கத்திறக்காக ப.நோ.கூ. சங்கங்களில் கொள்வனவு செய்யலாம். ஏனைய வியாபாரிகளுக்கு ப.நோ.கூ. சங்க இருப்பில் இருந்து வியாபார நோக்கங்களுக்கு விற்கப்படுவது முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளது. (இவ்வாறு நடைபெறுவது மாவட்டச் செயலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.)

★ அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது பரிசோதனை நடவடிக்கைகளை பன்முகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

★ வியாபாரத்திற்குரிய தர்மங்களையும், தார்மீகங்களையும் மீறுவது எங்களில் எவருக்குமே நீண்ட நன்மைகளைத் தரமாட்டாது.

★ மேற்கூறப்பட்ட பொருள்களை விற்பனை செய்யும் சகலரும் பாவனையாளர் பாதுகாப்புச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவே தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். யாழ். மாவட்டத்தில் மக்கள் படும் அவலங்கள், கஷ்டங்களை மேலும் அதிகரிக்காது தார்மீக ரீதியாக நீதியான, நியாயமான விலையில் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

★ மேற்கூறப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் வியாபாரிகள் தமக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர் என்பதையும் திட்டவட்டமாக அறியத்தருகின்றேன் - என்றுள்ளது. (அ-1)

# மனிதாபிமான விவகாரங்களுக்கான புலிகளின் பேச்சாளராக செல்வி

கிளிநொச்சி, பெப். 17

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான பேச்சாளர் ஒருவரை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நேற்று முதல் நியமித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் முன்பு பணியாற்றிய என்.செல்வி என்பவரே மனித உரிமை விவகாரங்களுக்கான பேச்சாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று கிளிநொச்சியில் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

"அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மனிதாபிமான நிலைவரம் மிகவும் மோசமாக உள்ளது. எனவே, இந்த மனிதப் பேரவலங்கள் தொடர்பான தகவல்களை மனிதாபிமான உதவி அமைப்புகளுக்கும் ஊடகங்களுக்கும் எடுத்துக் கூறுவதற்காக பேச்சாளர் ஒருவரை புலிகளின் தலைமை நியமித்துள்ளது" - என்று விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ்.புலித்தேவன் தெரிவித்திருக்கிறார்.

மனித உரிமை விவகாரங்களுக்கான பேச்சாளராக நியமிக்கப்பட்டிருக்கும் செல்வி வெளிநாடுகளில் இடம்பெற்ற புலிகளின் உயர்மட்ட சந்திப்புகளில் பங்குபற்றிய அனுபவம் உடையவர். விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக் குழுவிலும் பங்குபற்றியவர். வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருபவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர்கள் கைதாகும் படலம் மலையகத்தில் தொடர்கிறது

## பெயர்ப்பட்டியல்களோடு சி.ஐ.டியினர் வேட்டை

கொழும்பு, பெப். 17

மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது மேலும் தொடர்கிறது. நேற்றும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இரகசியப் பொலிஸார் தம் வசம் பெயர்ப்பட்டியல் ஒன்றை வைத்துக்கொண்டே தேடித் தேடிக் கைதுசெய்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இராகலையில் மூன்று தமிழ் ஆசிரியர்களைக் கைதுசெய்த இரகசியப் பொலிஸார், அவர்களையும் அழைத்துக் கொண்டு சென்றே நேற்று மேலும் இரு தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது. இராகலையைச்சேர்ந்த மோகன் ராஜ், ஹட்டன் ரொஸல்லையைச் சேர்ந்த ராஜன் ஆகிய இருவருமே நேற்றுக்கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

நேற்று கைதுசெய்யப்பட்டவர்களும் புதிய ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் எனத் தெரியவந்துள்ளது.

தமது வீடுகளுக்கு வரும் இரகசியப் பொலிஸார் தம் கையில் வைத்திருக்கும் பெயர்ப்பட்டியல் ஒன்றிலிருக்கும் பெயர்களைக் கூறி தம்முடன் அழைத்துவரப்பட்டவர்களைக்கொண்டு அடையாளம் காட்டியபின் விசாரணைக்காக அழைத்துச் செல்கிறோம் எனக் கூறிக்கொண்டு போகின்றனர். எங்கே கொண்டு சென்றனர் என்பதும் தெரியவில்லை என்று கைதானோரின் உறவினர்கள் கூறுகின்றனர்.

தமது பிரதேசத்தில் உள்ள பொலிஸ்நிலையங்களுக்குச்சென்று கேட்டால் அவர்கள் தமக்கு எதுவும் தெரியாது என்கின்றனர் என்றும் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர். (ஐ)

## நாளை

மாசி- 06
ஞாயிற்றுக்கிழமை
18.02.2007
திதி: பிரதமை
முன்னிரவு : 08.52
நட்சத்திரம் : சதயம்
பின்னிரவு : 12.54
சுபநேரம் : 09.32 - 11.00
ராகுகாலம் : 05.02 - 06.32

## வவுனியாவில் எரிக்கப்பட்ட சடலம் மீட்பு

கொழும்பு, பெப்.17

வவுனியா பூந்தோட்டம் மயானத்திற்கு அருகில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் எரியூட்டப்பட்ட நிலையில் இச்சடலம் மீட்கப்பட்டது. கொல்லப்பட்டவர் யார் என்பது இதுவரை அடையாளங்காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## வெளிமாவட்டம் செல்லும் மாணவர்கள் பதிவு செய்ய அரச அதிபர் அறிவுறுத்து

கொழும்பு, பெப். 17

வெளிமாவட்டத்துக்குச் செல்ல பயண வசதி தேவைப்படும் மாணவர்களை தமது பதிவுகளை இன்று யாழ். செயலகத்தில் மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தால் நுண்கலைமாணி தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் இரண்டாவது அணியினர் கப்பல் பயணத்துக்காக நேற்று சிவில் நிர்வாகத்துக்கு சென்றனர் என்றும் -

அவர்களுக்கு பயண ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றும் - முறையிட்டிருந்தனர்.

இவ்வாறு தகுதிகாண் பரீட்சைக்கு செல்லவிருக்கும் மாணவர்கள் மற்றும் ஏனைய வெளிமாவட்டங்களுக்குச் செல்லவிருக்கும் மாணவர்களை யாழ். செலயத்தில் இன்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-1)

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள் யாழ்ப்பாணம்

### உணவு விநியோகம் குறித்து இன்று அவசர கலந்துரையாடல்

குடாநாட்டின் உணவு விநியோகம் தொடர்பான அவசர கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

சகல பிரதேச செயலர்களையும் ப.நோ. கூ.சங்கங்களின் தலைவர்களையும் மற்றும் பொதுமுகாமையாளர்களையும் உணவு இருப்பு விவரங்களுடன் மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

### பத்திரிகையாளர் சங்க மாதாந்தக் கூட்டம்

வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் சங்கப்பணிமனையில் இடம்பெறவுள்ளது.

சங்கத்தலைவர் இ.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் குறித்து ஆராயப்படவிருக்கின்றது. (1)

### தென்மராட்சியில் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 10,12,13 ஆம் தரங்களில் வரலாறு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### வற்றாளை நாற்றுத்துண்டங்கள்

குடாநாட்டில் வற்றாளைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நாற்று வெட்டுத்துண்டங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வற்றாளைச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும் தலா 50 நாற்றுத் துண்டங்கள் உற்பத்திச் செலவில் வழங்கப்படும். (1-202-88)

### பணம் செலுத்தியோர் மருந்துகளை பெற அறிவுறுத்து

சுகாதாரத் திணைக்கள யாழ். அலுவலகத்தில் இதுவரை காலமும் மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்கள், எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பணிமனையில் வந்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (1-202)

### மாதகலில் திருப்பலி; பக்தர்கள் செல்ல அனுமதி

மாதகல் கடற்கரையிலுள்ள புனித லூர்த்து மாதா தேவாலயத்தில் வருடாந்த திருவிழாத் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை சிறு குழுக்களாக அடையாள அட்டையுடன் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலய கெபிக்குச் சென்றுவர பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

### பாராட்டு வைபவம்

கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய சண்டிலிப்பாய் கோட்ட மாணவர்களை பாராட்டும் வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. மானிப்பாய் வட்ட அரிமாக்கழகம் இந்த வைபவத்தை ஏற்பாடு செய்துள்ளது. (1-202)

### வலுவிழந்தோர் சங்க விழா

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 17ஆவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, 47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு என்னும் முகவரியில் அமைந்துள்ள சங்க விடுதியில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவை முன்னிட்டு மாற்று வலுவுடையோர்களுக்கான முச்சக்கரவண்டி, இருசக்கரவண்டி போட்டிகள் நாளை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் கட்டாந்தரைகளைப் பிடித்துவிட்டு வெற்றி பெற்றோம் என்று மார்தட்டுகிறது அரசு

## துணிவிருந்தால் முல்லை, கிளிநொச்சி மீது தாக்கட்டும் என்கிறார் ஸ்ரீபதி

கொழும்பு, பெப். 17

கிழக்கு மாகாணத்தில் பாழடைந்த கிராமங்கள் மீதும். கட்டாந்தரைகளிலும் பீரங்கி வேட்டுகளைத் தீர்க்கும் படையினர் தமது தாக்குதலுக்குப் பயந்து புலிகள் பின் வாங்கிவிட்டனர் எனக்கூறுவது புதுமையாக இருக்கிறது என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சி, துணிவிருந்தால் முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் தாக்குதல்களை நடத்தட்டுமே என்றும் சவால் விடுத்திருக்கிறார்.

கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின் போது ஸ்ரீபதி சூரியாராச்சி இவ்வாறு கூறினார்.

இப்போது கிழக்கு மாகாணத்தில் ஒரு புதுமையான யுத்தம் நடைபெறுகிறது. இதன் பின்னணியில் பல இரகசிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுகின்றன. ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றை நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்துவேன் என்றும் ஸ்ரீபதி சூரியாராச்சி கூறினார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி எம்மீது புலிமுத்திரை குத்த முயற்சிக்கிறார். ஆனால் உண்மையாகவே புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்பவர்கள் யார் என்பதை நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன. இதன் பின்னணியில் பல சுவாரஸ்யமான விடயங்கள் இருக்கின்றன. அவற்றையும் நாம் வெளிப்படுத்துவோம். இன்று புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியில் பிரபல்யம் பெறுவதற்கு அரசாங்கமே காரணம். ஜனாதிபதி அதிகரிக்கும் ஆட்கடத்தல்கள், கொலைகள், கப்பம் பெறுதல், தனிமனித உரிமைமீறல்கள் காரணமாகவே சர்வதேச அரங்கில் புலிகள் சிறப்புப் பெறுகின்றனர். இதில் மூடி மறைப்பதற்கு எதுவும் இல்லை என்றும் ஸ்ரீபதி சூரியாராச்சி செய்தியாளர்களிடம் கூறினார்.

(ஐ-1)

# இரும்புக்குண்டுகளை ஏற்றி வந்த இரு படகுகள் தாக்கி அழிப்பு

## கற்பிட்டிக் கடற்பரப்பில் சம்பவம்

விடுதலைப்புலிகளுடையவை எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு படகுகளை கற்பிட்டி கடற்பகுதியில் கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் இரும்புக்குண்டுகளை (Steel balls) ஏற்றிவந்த இந்தப் படகுகளை சந்தேகத்தின்பேரில் வழிமறித்த கடற்படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தபோது படகுகளில் இருந்து கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் - இதனையடுத்து கடற்படையினர் பதில் தாக்குதல் நடத்தி இரு படகுகளையும் மூழ்கடித்தனர் என்றும் கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் டி. கே. பி. திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

இந்த இரு படகுகளிலும் 28 பொதிகளில் இலட்சக் கணக்கான இரும்புக்குண்டுகள் ஏற்றப்பட்டிருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

வீதியோரக் குண்டுத்தாக்குதல்களுக்குப் பயன்படும் கிளைமோர் கண்ணிகளைத் தயாரிப்பதற்காக இந்த் இரும்புக்குண்டுகளை விடுதலைப்புலிகள் படகுகளில் கடத்தி வந்துள்ளனர் என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ - 4)

# தமிழகத்தில் கலைஞரின் ஆட்சியை கலைக்கக் கோருகின்றார் சுவாமி

## புலிகளுக்கு நேரடியாக உதவுவதாக அவர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 17

தமிழ்நாட்டில் புலிகளின் செயற்பாட்டுக்கு கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க. ஆகியவை நேரடியாக உதவி வருகின்றன என்று குற்றம் சாட்டியுள்ள ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, இதற்காக தமிழகத்தில் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசை பிரதமர் மன்மோகன் சிங் உடனடியாகக் கலைக்கவேண்டும் எனக் கோரியிருக்கின்றார்.

இது தொடர்பாக நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், தமிழ்நாட்டில் ஆட்சியிலிருக்கும் தி.மு.க. அரசு, தமிழகத்தைப் புலிகளின் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பான சொர்க்கமாக மாற்றியிருக்கின்றது என்று தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்நாடு கரையோரப் பகுதியில் புலிகளின் பெருமளவு ஆயுதங்கள், வெடிபொருள்கள் மற்றும் உபகரணங்கள் அண்மைய சில நாள்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றமை உண்மையை வெளிப்படுத்தி, கண்களைத் திறக்க வைத்திருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

''புலிகள் தமது நடவடிக்கைகளைத் தமிழ்நாட்டுக்கு விரிவுபடுத்தியிருக்கிறார்கள். தங்களது பயங்கரவாதச் செயல்களுக்கான மறைவிடமாகத் தமிழகத்தை மாற்றியுள்ளனர்.'' - என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

(க)

# குடாநாட்டுச் செய்தியாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையான செல்லையா சுப்பிரமணியம் முறைப்பாடு செய்துள்ளார்.

தமது வீட்டுக்கு அருகில் உள்ள வல்லியானந்தன் பிள்ளையார் கோயிலடியில் நண்பர்களுடன் மாலை 6.45 மணியளவில் கதைத்துக் கொண்டு நின்றார் என்றும் - அவ்வேளை அங்கு வந்த சிலர் ஒருவரைக் காணவில்லை என்று கூறி இவரைத் தனிமையில் அழைத்துச் சென்றனர் என்றும் -

அதன்பின் அவர் காணாமற் போய்விட்டார் என்றும் - அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் காணாமற்போன சில நிமிட நேரத் தில் அந்தப் பகுதி ஊடாக வெள்ளைவான் ஒன்று சென்றது என்றும் - துணைக்குழுக்களின் அச்சுறுத்தல் முன்னர் இவருக்கு விடுக்கப்பட்டிருந்தது என்றும் - அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'யாழ். தினக்குரல்', 'வலம்புரி' பத்திரிகைகளின் பிரதேச செய்தியாளராகவும், பத்திரிகை விநியோகஸ்தராகவும் பணியாற்றிய இவர் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றையும் நடத்தி வந்தார்.

**பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்**

இவரு கடத்தல் தொடர்பாக வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க அங்கத்தவரும், யாழ். தினக்குரல் மற்றும் வலம்புரி நாளிதழ்களின் பிரதேச செய்தியாளருமாகிய சுப்பிரமணியம் இராமச்சந்திரன் வியாழன் மாலை கடத்தப்பட்டுள் ளமை எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

உண்மை, நடுநிலைமை மற்றும் பக்கச்சாராமை எனும் உயரிய ஊடக கோட்பாட்டுடன் காலநேரம் பாராது அர்ப்பணிப்புடன் அவர் தமது பணியினை ஆற்றிவந்திருந்தார்.

குடாநாட்டில் தொடரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் மீதான நெருக்குவாரங்கள் மத்தியில் தற்போது இராமச்சந்திரனும் கடத்தப்பட்டுள்ளார்.

ஊடகப்பணியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்த அவரை கடத்தியவர்கள் எவராக இருப்பினும் மனிதாபிமான அடிப்படையில், விடுவித்து உதவவேண்டுமென நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது. (1-155)

# யாழ். பத்திரிகைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இல்லையேல் எனது தேர்தல் மாவட்டமான யாழ்ப்பாணத்தின் மக்களைப் பொறுத்தமட்டில் தகவல் பெறும் உரிமை அர்த்தமற்றதாகிவிடும்.

இவ்விடயம் தொடர்பில் அவசியமான பணிப்புரையை வழங்குமாறும் அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்து மாறும் வேண்டுகின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# மரண அறிவித்தல்கள்

## நடராசா நாகம்மா

இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த நடராசா நாகம்மா நேற்று (16.02.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-சுந்தரம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி (கொழும்பு), சரோஜினிதேவி, இந்திராணி, திருஞானசம்பந்தர் (கனடா), ஞானசம்பந்தர் (உலக சுகாதார நிறுவனம்), ஞானசூரியர் (உளநல சேவையாளர்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்: ந.ஞானசம்பந்தர்,
ந.ஞானசூரியர் (மகன்மார்).

## உலகநாதர் சுப்பிரமணியம் (அம்பியர்)

குப்பிழான் சமாதி கோயிலடியைச் சேர்ந்த உலகநாதர் சுப்பிரமணியம் (அம்பியர்) 09.02.2007 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின்(குஞ்சி) அன்புக் கணவரும் பாக்கியத்தின் (இந்தியா) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மாமனும் சுமணன் (ஜேர்மனி), றஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஸ்வாதி (ஜேர்மனி), சோபியா (ஜேர்மனி), பிரணாஸ் (லண்டன்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 10.02.2007 சனிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாக்கியம் (மகள்-இந்தியா) 00914366229986
சுமணன் (பேரன்-ஜேர்மனி) 004968319860465

(58255)

## திருமதி கனகர் உத்தமிப்பிள்ளை

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகர் உத்தமிப்பிள்ளை நேற்று (16.02.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கனகரின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (கனடா), இராசரெத்தினம், பாக்கியம் (லண்டன்), சாம்பசிவம், நல்லம்மா, தேவராசா, சொர்ணலட்சுமி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், திருநாவுக்கரசு, திருச்செல்வம் மற்றும் சிவபதி, பூலோகசிங்கம், கமலாதேவி, இராசலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2006) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# மூவரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சண்முகநாதன் சுஜீவன் (வயது 25) என்பவர் கடந்த 6ஆம் திகதி வீட்டில் இருந்து புறப்பட்டவர் நேற்றுவரை வீடு திரும்பவில்லை என்று அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

கைதடியைச் சேர்ந்த வெள்ளையன் மோகனச்சந்திரன் என்பவரை கடந்த ஆறாம் திகதி தொடக்கம் காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# போர்நிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கென்று தனியாகவே உள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தமே புலிகளுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. சர்வதேச நாடுகள் இவற்றை ஏற்றுக்கொண் டுள்ளன. இவற்றையெல்லாம் எற்றுக் கொண்ட சர்வதேச நாடுகள் புலிகளுக்கு தனிநாடு வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசுக்கு நிச்சயம் அழுத்தம் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதன்காரணமாகவே இந்த ஒப்பந்தத்தை ஐந்து வருடங்கள் நிறைவடைய விடாமல் அரசு கிழித்தெறிய வேண்டும் எனக் கோரி வருகிறோம்.

இதனை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டு வருகிறோம். அதனால், அரசு இந்தப் போராட்டத்திற்கு எந்தவித பதிலையும் இன்னமும் தர வில்லை.

இதன் காரணமாக நாளை (அதாவது இன்று) காலை 10 மணிக்கு கண்டி தலதா மாளிகையில் வைத்து எமது முக்கிய தீர்மானம் ஒன்றை வெளியிடவுள்ளோம் -என் றார். (அ-க)

# பாகிஸ்தான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் றோகித போகொல்லாகமவும் பாகிஸ்தான் சார்பில் அமைச்சர் குர்ஷிட் மஹ்மூத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் விஸ்தரிப்பது குறித்தும்-

விமானத்துறை அபிவிருத்தி குறித்தும்- மீண்டும் விரைவில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவும் முடிவாகியது. (அ)

## ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

**இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தின் வருடாந்த ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை (18.02.2007) ஞாயிற்றுக் கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அந்நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே சான்றிதழ் பெறுவதற்கான அழைப்பிதழ் பெற்றவர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும்.**

**இணுவில் கிழக்கு இளைஞர் கழகம்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செபரத்தினம் கிறேஸ் லீலாவதி



எழுதுமட்டுவாழ், கிளாலியைப் பிறப்பிடமாகவும் துன்னாலை மேற்கு, கரவெட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபரத்தினம் கிறேஸ் லீலாவதி நேற்று (16.02.2007) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - இராசம்மா தம்பதியரின் மூத்த மகளும் செல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செபரத்தினத்தின் (இ.தே. உப்புக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் ஜெபராணி, ஜெபசோதி (கிளி. இயக்கச்சி அ.த.க. பா - ஆசிரியை), ஜெபமணி, ஜெபராஜன் (லண்டன்), ஜெபரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் சாள்ஸ், திரவியரத்தினம் (தபால் ஊழியர் - பளை), அழகரத்தினம் (இ.தே. உப்புக் கூட்டுத்தாபன மேற்பார்வையாளர்), தேவதயாநிதி (லண்டன்), சற்குணம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் அஜந்தா, அமிர்தா, திரோறீற்றா, றொரானி, சாம், நொயல், ஆர்த்தி, அபிரா, ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.02.2007) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று சக்கோட்டை மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தேவ வாசா', கலிகைச் சந்தி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(58250)

## சோமசுந்தரம் மகேஸ்வரி



நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் மகேஸ்வரி நேற்று (16.02.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-திரவியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம் (கனடா), வினாயகமூர்த்தி (சுவிஸ்), விக்னேஸ்வரமூர்த்தி (விதுஷன் அழகு மாடம்-சுன்னாகம்), கிருபாகரமூர்த்தி (U.A.E), சந்திரகுமார் (கொழும்பு), வசந்தாதேவி (டென்மார்க்), வசுமதி , சிவமதி ஆகியோரின் பாசமிகு தாயும் பிரபாசக்தி (கனடா), கலையரசி (சொக்கம்மா-சுவிஸ்), சாந்தலக்சுமி (சக்தி), சுரேஸ்குமார் (டென்மார்க்), சோமஸ்கந்தமூர்த்தி, தர்மசீலன் (சிறி) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் அன்னலிங்கம், தேவராஜா (இத்தாலி), நாகரத்தினம் (ராசு), இராசலக்சுமி, இராஜேஸ்வரி, பூமணிதேவி (பகவதி-சுவிஸ்), காலஞ்சென்ற செல்லம்மா (இராசாத்தி), காலஞ்சென்ற மனோ ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, நடராசா, செல்லையா, சிவகாமிப்பிள்ளை மற்றும் கனகம்மா, இராசம்மா, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் பிரணவன் (கனடா), விதுஷன்(சுவிஸ்), தமிழினி (சுவிஸ்), சந்தோஷ், கவிந்தன் (டென்மார்க்), ஜனார்த்தனன், ரவிதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(58258)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org